# பின் நவீனத்துவப் பெண்ணிய அறிவாராய்ச்சியியலின் வளர்ச்சியில் மிஷேல் பூக்கோவின் பங்களிப்பு: ஒரு விமர்சனப் பகுப்பாய்வு

பர்வின், மு.மு.மு., நிரோசன்.சி.
மெய்யியல் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
*mumthajfarvin12@gmail.com*

இந்த ஆய்வுக் கட்டுரையானது பாரம்பரிய பெண்ணிய அறிவாராய்ச்சியியல் தொடர்பாக தெளிவுபடுத்துவதோடு பெண்ணிய அறிவாராய்ச்சியியல் தொடர்பான பின் நவீனத்துவச் சிந்தனைகளையும், பின் நவீனத்துவ பெண்ணிய அறிவாராய்ச்சியியலின் வளர்ச்சியில் மிஷேல் பூக்கோவின் பங்களிப்பினையும் விமர்சன ரீதியில் பகுப்பாய்வு செய்கின்றது. அறிவாராய்ச்சியியல் நோக்கில் பெண்ணிய நிலைப்பாட்டிற்கும் பின் நவீனத்துவப் போக்கிற்கும் தொடர்புகளை இனங்கண்டுகொள்ளுதல், பூக்கோவின் பெண்ணியச் சிந்தனைகள் பின் நவீனத்துவப் பெண்ணிய அறிவாராச்சியியலின் வளர்ச்சியில் ஏற்படுத்திய செல்வாக்கினைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் பால்நிலைச் சமத்துவம் பற்றிய அறிவு குறித்த சமகால உலகின் நோக்கினை மையமாகக்கொண்டு பூக்கோவின் சிந்தனைகளைப் பகுப்பாய்வு செய்தல் என்பன இந்த ஆய்வின் பிரதான நோக்கங்களாகும். பெண்கள் சார்ந்த பாரம்பரிய நம்பிக்கைகளை நோக்கும்போது பாலின அடிப்படையில் ஆணாதிக்கத்தின் அதிகாரம் மேலோங்கி முதன்மைபெற்ற ஒன்றாகவே காணப்பட்டது. பெண்கள் என்பவர்கள் ஆண்களின் நலன்களுக்காக மட்டுமே சேவை செய்பவர்களாக பார்க்கப்பட்டதோடு அவர்கள் தாழ்ந்தவர்களாக மதிக்கப்பட்டார்கள். ஆனால் இந்நிலைப்பாடு பூக்கோவின் சிந்தனைகளுக்குப் பின்னர் பாரிய மாற்றங்களைக் கண்டுகொண்டது. சமகால சமூக அரசியற் கோட்பாட்டின் கண்ணோட்டத்தின்படி அதிகாரம் - அறிவு பற்றிய பூக்கோவின் சிந்தனைகள் மரபுவழிச் சிந்தனைகளுக்கு அவர் முன்வைக்கும் சவாலாகும். பூக்கோவின் கருத்துப்படி அதிகாரம் சகல விடயங்களிலும் காணப்பட்டாலும் அதனை அடக்குமுறையாகக் குறிப்பிடவில்லை. அதிகாரத்தின் பகிர்வு மற்றும் அறிவின் ஒதுக்கீடு என்று குறிப்பிட்டார். பெண்கள் மீதான அடக்குமுறையானது பெரும்பாலும் பாலியல் அடக்குமுறையாகவே காணப்படுகின்றது. ஆனால் பூக்கோ இதனைப் பாலின அடக்குமுறையாகக் கருதவில்லை. மாறாக அதிகாரத்தின் விளைவாகக் கருதுகின்றார். சமூகத்தின் பல மட்டங்களிலும் பல அலகுகளாக அதிகாரம் விரவிக் காணப்படுகின்றது. பாடசாலைகள், தொழிற்சாலைகள், சிறைக்கூடங்கள், மற்றும் மனித உடல்கள் மீது அதிகாரம் பிரயோகிக்கப்படுகின்றது. இவ்வகையில் பெண்களின் உடல் பாலினப்பண்பு ஒடுக்கப்படுவதன் அடிப்படைக் காரணமாக அதிகார அரசியல் காணப்படுவதனைப் பூக்கோவின் சிந்தனைகள் வெளிப்படுத்துகின்றன. பூக்கோவின் இத்தகைய சிந்தனைகள் பெண்ணியவாதிகளுக்குக் குறிப்பிடத்தக்க ஆதாரமாக மாறியது. ஏனெனில் அதிகார உறவுகளின் பகுப்பாய்வு பெண்களின் நிலைகளைப் புரிந்துகொள்வதற்கு மையமாக அமைகின்றது என்பதனைப் பூக்கோவின் சிந்தனைகள் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தன. இது பெண்ணியவாதிகள் பாலினத்திற்கும் அதிகாரத்திற்கும் இடையிலான உறவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு வித்திட்டது. எனவே பெண்ணியவாதிகள் தங்களது இலக்கினை நோக்கி நகர்வதற்கான சிறந்ததொரு அறிவாராய்ச்சியியல் அடித்தளத்தினை 'அதிகாரம் பற்றிய கருத்து பாலினம் சார்ந்த பகுப்பாய்விற்குரியதாகும்' எனும் பூக்கோவின் சிந்தனை வழங்கியிருக்கிறது என்பதனை வெளிக்கொணர்வதாக இந்த ஆய்வு அமைகின்றது. இவ்வாய்வுக்குத் தேவையான



CS CamScanner

தரவுகள் அறிவாராய்ச்சியியல் மற்றும் பெண்ணியம் தொடர்பான பூக்கோவின் நூல்களில் இருந்தும், பூக்கோவின் பெண்ணியம், அறிவாராய்ச்சியியல் என்பன தொடர்பாக வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இது ஒரு விமர்சன ரீதியான பகுப்பாய்வாக அமைவதோடு இந்த ஆய்வில் எண்ணக்கரு பகுப்பாய்வு, உள்ளடக்கப் பகுப்பாய்வு, விபரணப் பகுப்பாய்வு, விமர்சனப் பகுப்பாய்வு ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது சமகால உலகில் பெண்ணியம் தொடர்பான புதிய சிந்தனைகளையும், அவற்றின் பரிணாம வளர்ச்சியையும் வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:** *அறிவு, அதிகாரம், ஆணாதிக்கம், பாலினப்பண்பு, பால்நிலைச்சமத்துவம்*